# ரூ.33,660 கோடியில் பாரத தொழில் மேம்பாட்டுத் திட்டம்

புது தில்லி, மார்ச் 18: நாடு முழுவதும் 100 தொழில் பூங்காக்களை மேம்படுத்த, ரூ. 33,660 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய பாரத தொழில் மேம்பாட்டுத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அமைச்சரவை கூட்டத்துக்குப் பிறகு இது குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ரூ.33,660 கோடி பாரத தொழில் மேம்பாட்டு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் உற்பத்தித் திறனை ஊக்குவித்து உலகத் தரத்திலான தொழிலக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தகவல் தொடர்பு தொழில் நுட்ப வசதி, உட்புறச் சாலைகள், கீழ்தள வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகள், கழிவுநீர் கால்வாய் வசதிகள், நீர் சுத்திகரிப்பு வசதிகள், சோதனைக் கூடங்கள், கிடங்குகள், தொழிலாளர்களுக்கான வீடுகள் என உடனடியாக தொழிலைத் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளும் இடம்பெற்றிருக்கும் வகையில் இந்தத் தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும்.

இத் திட்டத்தின் கீழ், 100 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் நிலப் பரப்பு வரையிலான தொழில் பூங்காக்களை மேம்படுத்த நிதி உதவி அளிக்கப்படும். ஏக்கருக்கு ரூ. 1 கோடி வீதம் நிதியுதவி அளிக்கப்படும். இத் திட்டம் 15 லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தி நிறுவனங்கள், குறு-சிறு-நடுத்தர நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள், உலகளாவிய முதலீட்டாளர்களுக்கும் இத்திட்டம் நேரடிப் பலன்களை அளிக்கும்.

தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தொழில்துறை சீர்மிகு நகரங்கள் மேம்படுத்தும் திட்டம் வெற்றி பெற்றதன் அடிப்படையில், பாரத தொழில் மேம்பாட்டுத் திட்டமும் மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

**பருத்தி கொள்முதலுக்கு...** இந்திய பருத்தி கழகத்தின் (சிசிஐ) கொள்முதல் நடவடிக்கைகளுக்கு ரூ. 1,718.56 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

விவசாயிகள் நலனை மேம்படுத்தவும், தற்சார்பு இந்தியா இலக்கை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலும் இந்திய பருத்தி கார்ப்பரேஷனுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

**உ.பி.யில் தேசிய நெடுஞ்சாலையை தரம் உயர்த்த...** உத்தர பிரதேச மாநிலத்தில் பாராபங்கி முதல் பஹ்ராய்ச் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 927-ஐ 4 வழிப் பாதையாக தரம் உயர்த்தும் ரூ. 6,969 கோடி திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்




புது தில்லியில் புதன்கிழமை மத்திய அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை செய்தியாளர்களிடம் விளக்கிய மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

## சிறிய நீர் மின் உற்பத்தித் திட்டங்கள்

ரூ. 2,585 கோடி ஒதுக்கீட்டில் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இது குறித்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், '1,500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில், இத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அணைகள் எதுவும் கட்டாமலும், மக்களை இடமாற்றம் செய்யாமலும், ஏற்கெனவே பாய்ந்து கொண்டிருக்கும் ஆற்றில் இத்தகைய சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி மேற்கொள்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் வரும் 2030-31-ஆம் ஆண்டு வரை 5 ஆண்டு காலத்துக்கு நடைமுறைப்படுத்தப்படும். இந்த நீர் மின் உற்பத்தித் திட்டம் சுமார் ரூ.15,000 கோடி முதலீட்டை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் 1 மெகா வாட் முதல் 25 மெகா வாட் வரையிலான திறனுடன் கூடிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க மத்திய அரசு நிதி ஆதரவு அளிக்கும். வடகிழக்கு மாநிலங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு மெகா வாட்டுக்கு ரூ. 3.6 கோடி அல்லது திட்ட மதிப்பில் 30 சதவீத நிதியை மத்திய அரசு அளிக்கும். பிற மாநிலங்களுக்கு ஒரு மெகாவாட் திறனுக்கு ரூ.2.4 கோடி அல்லது திட்ட மதிப்பில் 20 சதவீதத் தொகையை மத்திய அரசு வழங்கும்.

நாடு முழுவதும் மொத்தம் 21,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுடன் இதுபோன்ற சிறிய நீர் மின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான 7,133 இடங்கள் உள்ளன. தற்போதைய நிலையில், 1,196 இடங்களில் சுமார் 5,100 மெகா வாட் உற்பத்தி திறனுடன் சிறிய நீர் மின் உற்பத்தி திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன என்றார்.

### வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும் இறப்புக்கான காரணத்தை

# மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ்

## தமிழக பொது சுகாதாரத் துறை திட்டம்

**சென்னை**

வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ் வழங்குவதை செயல்படுத்த தமிழக பொது சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 6.96 லட்சம் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. அதில், 23 சதவீதம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போதும், 73 சதவீதம் வீடுகளிலும் நடக்கிறது. 4 சதவீதம் எதிர்பாராத விபத்துகள் காரணமாக உள்ளது. இந்நிலையில், இறப்புக்கான முழுமையான காரணங்களை கண்டறிந்து, அப்பகுதியில் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் செய்யும் ஆய்வை தமிழக பொது சுகாதாரத்துறை மேற்கொண்டு வருகிறது.

**இறப்புக்கான காரணங்கள் பதிவு**

முதல்கட்டமாக, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 2023-ம் ஆண்டுகளில் இறந்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அதில், எவ்வித காரணமும் இன்றி, வயது மூப்பு காரணமாக இறந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின்படி, இறந்தவர்களின் வீடுகளுக்கு சென்று, இறப்புக்கான நோய் உள்ளிட்ட காரணங்கள் பதிவு செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக, பொது சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில், வீடுகளில் இறந்தவர்களின் விபரங்கள் அடிப்படையில், அவர்களின் இறப்புக்கான காரணம் பதிவு செய்யப்பட்டது. அதில், 98 சதவீதம் இறப்புக்கான காரணம் கண்டறிந்ததில், 20 சதவீதம் வரை இதய நோயாலும், 7 சதவீதம் நீரிழிவு நோய் போன்றவற்றாலும் இறப்புகள் நிகழ்ந்திருப்பது தெரிய வந்துள்ளது.

தொடர்ந்து, பெரம்பலூர், திருநெல்வேலி உட்பட 10 மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும். பின்னர், மாநிலம் முழுவதும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

**விழிப்புணர்வு நடவடிக்கை**

வரும் காலங்களில் வீடுகளில் இறந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலமாக உறுதி செய்து சான்றிதழ் வழங்குவது கட்டாயமாக்கப்படும். இறந்தவர்களின் இறப்புகளை முறையாக பதிவு செய்யுமாறு அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புள்ளி விபரங்கள் மூலம் ஒரு பகுதியில் அதிகப்படியாக இறப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அங்கு விழிப்புணர்வு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றனர்.

# இந்தியாவில் மேலும் இரு யுரேனியம் சுரங்கங்கள்

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் தகவல்

**புது தில்லி, மார்ச் 18:** நாட்டில் புதிதாக இரண்டு யுரேனியம் சுரங்கத் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப்பட இருப்பதாக மத்திய அணுசக்தி துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் எழுத்துபூர்வமாக புதன்கிழமை அளித்த பதில்:

ராஜஸ்தானின் சிகர் மாவட்டம், சத்தீஸ்கரின் ஜஜ்வால் மாவட்டத்தில் நாள்தோறும் 2,500 டன்னை கையாளும் திறன்கொண்ட யுரேனியம் சுரங்க நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. அதற்கான சட்டபூர்வ ஒப்புதல்களைப் பெற வேண்டிய நடைமுறை பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

யுரேனியத்தை அகழ்ந்தெடுப்பதற்கான உள்நாட்டு திறனை அதிகரிக்கும் முன்னெடுப்புகளை அணுசக்தி துறையின் கீழ் செயல்படும் பொதுத் துறை நிறுவனமான யுரேனியம் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (யுசிஐஎல்) மேற்கொண்டு வருகிறது. 2047-க்குள் இந்தியா வளர்ச்சியடைந்த பாரதமாகும் நோக்கில், புதிய யுரேனியம் சுரங்கத் திட்டங்களுக்கு யுசிஐஎல் திட்டமிட்டு வருகிறது என்றார்.

ஏற்கெனவே ஆந்திரம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் யுரேனியம் சுரங்கங்களை யுசிஐஎல் கையாண்டு வருகிறது. அணு உலைகளில் யுரேனியம் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# யுகாதி பண்டிகை: ஆளுநர், முதல்வர் வாழ்த்து

சென்னை, மார்ச் 18: யுகாதி பண்டிகையையொட்டி, தமிழக ஆளுநர் (பொறுப்பு) ஆர்.வி.ஆர்லேகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர்: யுகாதி, குடி பட்வா, வசந்த நவராத்திரி மற்றும் சேட்டி சந்த் ஆகிய புனிதமான திருநாள்களை முன்னிட்டு தமிழகத்தில் வாழும் என் சகோதர, சகோதரிகளுக்கும், நாடு முழுவதும் உள்ள மக்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திருநாள்கள் நமது நாட்டின் செழுமையான பண்பாட்டு பாரம்பரியத்தையும், தொன்மையான மரபுகளையும் பிரதிபலித்து, சமூகத்தில் அமைதி, வளம் மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கின்றன. இந்தப் பண்டிகைகள் அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம் மற்றும் வளத்தை வழங்கட்டும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: யுகாதி பண்டிகையைக் கொண்டாடும் தெலுங்கு, கன்னட மக்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த வாழ்த்துகள். தமிழ்நாட்டில் யுகாதி திருநாளுக்கு அரசு விடுமுறை அளித்தது தொடங்கி, தமிழகத்தில் வாழும் மொழிச் சிறுபான்மையின மக்களுக்கு என்றும் காவல் அரணாகத் திமுக அரசு திகழ்ந்து வருகிறது. வண்ணக் கோலம், அறுசுவையும் அடங்கிய பச்சடி விருந்துடன் எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் யுகாதியை கொண்டாடும் தெலுங்கு, கன்னட மொழிபேசும் மக்கள் அனைவருக்கும் மீண்டும் யுகாதி நல்வாழ்த்துகள். வரும் மே மாதம் அமையவுள்ள திமுக 2.0–அரசுக்கும் இந்த யுகாதி தொடக்கமாக அமையட்டும்.

# எந்தெந்த ஆவணங்களைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்?

## தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்



**சென்னை, மார்ச் 18:** வரும் பேரவைத் தேர்தலில் வாக்காளர் அடையாள அட்டைக்கு மாற்றாக 12 வகை ஆவணங்களைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பு:

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை வாக்குப் பதிவின்போது ஆவணமாக காண்பிக்க இயலாதவர்கள் அதற்கு மாற்றாக ஆதார் அட்டை, தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி/அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை/ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, ஓட்டுநர் உரிமம், பான் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறன் அட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய/மாநில அரசுகள்/பொதுத் துறை நிறுவனங்கள்/வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், நாடாளுமன்றம், சட்டப்பேரவை, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை போன்றவற்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

**புகைப்படமில்லா வாக்காளர் தகவல் சீட்டு:** வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்படத்துடன் கூடிய தகவல் சீட்டு வழங்கப்பட்டு வந்தது. தற்போது அதற்குபதிலாக வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும் தகவல் சீட்டை அச்சடித்து தர முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவுக்கு ஐந்து நாள்களுக்கு முன்பாக அனைத்து வாக்காளர்களுக்கும் அந்தச் சீட்டு விநியோகிக்கப்படும்.

ஒரு வாக்காளர் வேறொரு தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருந்தாலும், அதனை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால், வாக்காளருடைய பெயர் சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடியில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதுவரை ரூ.42 கோடி பணம், பொருள்கள் பறிமுதல்

தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படையினரால் இதுவரை ரூ.42.65 கோடி மதிப்பிலான கணக்கில் வராத பணம், பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை (மார்ச் 18) வரை ரொக்கம் ரூ.2.37 கோடியும், ரூ.20.80 கோடியிலான இலவசப் பொருள்களும், ரூ.16.42 கோடி மதிப்பிலான உலோகங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை தவிர, ரூ.2.88 கோடி மதிப்புடைய போதைப் பொருள்கள், ரூ.18 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களையும் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். அவற்றின் மொத்த மதிப்பு ரூ.42.65 கோடி. தமிழகத்தில் சட்டவிரோத பணப் புழக்கம், வாக்காளர்களைக் கவர வழங்கப்படும் இலவசப் பொருள்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருள்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தலைமைத் தேர்தல் அதிகாரி விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4 லட்சம் பணியாளர்களுக்கு பயிற்சி:** இதனிடையே, தமிழகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், செலவின கண்காணிப்புக் குழுக்கள், வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணியாளர்களுக்கும் முதல் கட்டமாக மாநில அளவிலான பயிற்சிகள் நடத்தப்பட்டன. அடுத்தகட்டமாக, 6,803 மண்டல அதிகாரிகள், 75,032 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், 2,25,096 வாக்குச்சாவடி அலுவலர்கள் உள்பட 4 லட்சம் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து நிலைகளிலும் உள்ள தேர்தல் தொடர்புடைய அலுவலர்கள் முறையாகப் பயிற்சி பெற்று, சுதந்திரமான, நியாயமான மற்றும் திறமையான முறையில் தேர்தலை நடத்துவதற்குத் தங்களை தயார்படுத்திக் கொள்வதை உறுதி செய்வதே இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்.

epaper.dinamani.com

# ஆந்திராவில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பேருந்து திட்டம்

### முதல்வர் சந்திரபாபு நாயுடு தொடங்கி வைத்தார்

என்.மகேஷ்குமார்

அமராவதி

ஆந்திராவில் பெண்களை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கும் இலவச பேருந்து பயண திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார்.

ஆந்திராவில் 'சூப்பர் சிக்ஸ்' திட்டம் அமல்படுத்தப்படும் என கடந்த 2024 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு வாக்குறுதி அளித்தார். தேர்தலுக்கு பின் ஆட்சியை கைப்பற்றிய அவர், அத்திட்டத்தை படிப்படியாக அமல்படுத்தி வருகிறார்.

இதன்படி மாதந்தோறும் முதியோர்களுக்கு தலா ரூ.4 ஆயிரம், மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம், சர்க்கரை நோய், எய்ட்ஸ் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் என உதவித் தொகை வழங்கப்படுகிறது.

வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயண திட்டம் அமல்படுத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் அண்ணா கேன்டீன்கள் திறக்கப்பட்டு ரூ.5-கு சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்கப்படுகிறது. தாய்மடி திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு தாய்மார்களுக்கு ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 'மாற்றுத் திறனாளிகளின் சக்தி' எனும் பெயரில் ஆந்திர மாநிலம் முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச அரசுப் பேருந்து பயண திட்டத்தை சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார்.

குண்டூர் மாவட்டம், மங்களகிரி பேருந்து நிலையத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்த அவர் மாற்றுத் திறனாளிகளுடன் பேருந்தில் பயணம் செய்தார். துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள் லோகேஷ் உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

சந்திரபாபு நாயுடு கூறுகையில், "இத்திட்டம் மூலம் மாநிலத்தில் 12.5 லட்சம் பேர் பயனடைவர். 5 ரக பேருந்துகளில் இவர்களில் பயணம் செய்யலாம். கடந்த ஆட்சியில் இவர்களுக்கு தலா ரூ.500 நிதி உதவி வழங்கப்பட்டது. எங்களின் ஆட்சியில் இது தற்போது தலா ரூ.6 ஆயிரமாக வழங்கப்படுகிறது" என்றார்.



ஆந்திராவில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச அரசுப் பேருந்து பயண திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்து, மாற்றுத் திறனாளிகளுடன் பயணம் செய்தார்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

### அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்கள் சொந்த நாடு திரும்ப

# இலவச விமான டிக்கெட், ரூ.2.41 லட்சம் போனஸ்

வாஷிங்டன்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அந்நாட்டு அரசு அவர்களது சொந்த நாடுகளுக்கு நாடு கடத்தி வருகிறது. இந்நிலையில் நேற்று ஒரு புதிய திட்டத்தை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

ஆவணங்கள் இல்லாத இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வருவோர் இலவசமாக தங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்காக இந்த திட்டத்தை அமெரிக்காவின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் தாஜ்மஹாலின் புகைப்படத்தை அந்தத் துறை பயன்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை சமூக வலைதளத்தில், "நீங்கள் ஒரு புதிய தொடக்கத்துடன் உங்கள் தாய்நாட்டுக்கு செல்லலாம். சிபிபி ஹோம் என்ற செல்போன் செயலியைப் பயன்படுத்தி நீங்களாகவே உங்கள் நாட்டுக்கு செல்ல முன்வரும்போது இலவச விமான டிக்கெட் மற்றும் வெளியேறுவதற்கான 2,600 அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.2.41 லட்சம்) போனஸ் தொகையைப் பெற்றிடுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு வருவோருக்கு எந்த வித சட்டச் சிக்கலும் இல்லாமல் அவர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஆவணமின்றி சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை கண்காணிப்பதற்கான செலவுகளைக் குறைக்கவும், காவல், நீதித்துறை அமைப்புகளின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும், அதே நேரத்தில் முறை சார்ந்த நாடு கடத்தலுடன் தொடர்புடைய சட்டரீதியான தண்டனைகளைத் தனி நபர்கள் தவிர்க்கவும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் இந்தியாவிலுள்ள தாஜ்மஹால் புகைப்படத்தை அச்சடித்துள்ளனர். இந்தத் திட்டத்தை வரவேற்கும் சிலர், தாஜ்மஹால் புகைப்படத்தை இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் அச்சிட்டது ஏன் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், சுய நாடு கடத்தல் திட்டத்தின் மூலம் பணம் வழங்குதல் மற்றும் இலவசப் பயணத்துக்கான சலுகைகள் இக்கட்டான சூழலில் இருப்பவர்களை ஈர்க்கக் கூடும் என்று குறிப்பிட்டாலும், இத்தகைய திட்டங்கள் நீண்ட கால விளைவுகளை மறைக்கக் கூடும் என்று குடியேற்றப் பிரிவு வழக்கறிஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# 80 ஆயிரம் டன் கச்சா எண்ணெயுடன் முந்த்ரா துறைமுகம் வந்தது 'ஜக் லாட்கி'

■ அகமதாபாத்

இந்தியக் கொடியுடன் கூடிய 80,000 டன் கச்சா எண்ணெய் ஏற்றிய 'ஜக் லாட்கி' கப்பல் குஜராத்தில் உள்ள அதானி முந்த்ரா துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படை ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருவதால் உலக நாடுகளுக்கு சரக்குக் கப்பல் செல்லக் கூடிய ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு போக்குவரத்து முடங்கி எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியால் இந்தியக் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல ஈரான் சிறப்பு அனுமதி கொடுத்தது. இதையடுத்து மொத்தம் 92,712 டன் எல்பிஜி உடன் ஷிவாலிக் என்ற டேங்கர் கப்பலும் (மார்ச் 16) சு நந்தா தேவி (மார்ச் 17) என்ற மற்றொரு டேங்கர் கப்பலும் அடுத்தடுத்து இந்தியா வந்து சேர்ந்தன.

இந்நிலையில், இந்தியக் கொடியேந்தி 'ஜக் லாட்கி' கப்பல் சுமார் 80,886 டன் கச்சா எண்ணெயுடன் நேற்று முந்த்ரா துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த சரக்கு கப்பல் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா துறைமுகத்தில் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. 22 கப்பல் பாதுகாப்பாக உள்ளது.

கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் ராஜேஷ் குமார் சின்ஹா நேற்று கூறும்போது, "தற்போது ஹார்முஸ் ஜலசந்திக்கு மேற்கே 22 இந்தியக் கப்பல்களில் உள்ள 611 நபர்கள் உட்பட, அனைத்து இந்தியக் கப்பல்களும் இந்தியக் குடிமக்களும் பாதுகாப்பாக உள்ளனர்.

இதுவரை அசம்பாவிதங்கள் ஏதும் பதிவாகவில்லை. கடந்த 24 மணி நேரத்தில், அந்தப் பிராந்தியத்தின் பல்வேறு துறைமுகங்கள் மற்றும் இடங்களிலிருந்து வெளியேறுவதற்கான நடைமுறைகள் முடிக்கப்பட்டு, 25 இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே இந்தியா வந்த சிவாலிக் மற்றும் நந்தாதேவி ஆகிய கப்பல்களில் இருந்து எல்பிஜி சரக்குகளை இறக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது" என்றார்.